DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Tmt.M.Praveena, M.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.60/2018**

**CNR.No: TNTH06-000072 -2018)**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகானந்தம் | Town | பல்லடம் – திருப்பூர் |
| Father Name | : பழனிக்குமார் | Taluk | : |
| Age | : 45 | **DW1** | |

---

நாள் : 13.07.2026

**பி.வா.சா.1 ன் முதல் விசாரணை**

1) 11.01.2010 ம் தேதியிட்ட மணிகண்டன் மற்றும் சுகவாசம் செல்வமணி என்ற செல்வி என்பவரின் பெயரிலான கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 1.

2) 06.12.2010 ம் தேதியிட்ட கிருஷ்ணமூர்த்தி பெயரிலான பவர் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.2.

3) 25.05.2011 ம் தேதியிட்ட முருகானந்தம் பெரியலான கிரையம் பத்திரத்தின் நகல் பி.வா.சா.ஆ 3.

4) 20.10.2017 ம் தேதியிட்ட மனு ரசீது சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 4.

5) இவ்வழக்கு வாதியால் 13.11.2017 ம் தேதியில் கொடுக்கப்பட்ட புகார் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 5.

தாவா தள்ளுபடியாக வேண்டுகிறேன்.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டு அது இந்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1) எனது வீட்டில் கிழக்கு பக்கத்தில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து

உள்ளது என்றால் சரிதான் அது காலிமனை நிலமாகும். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் என்னுடைய சொத்து கிரையம் பெறப்பட்ட விபரம் குறித்து குறிப்பாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிராமண பத்திரிக்கையில் பத்தி 2ல் எதிர்வழக்குரையில் சொல்லாத விபரங்கள் இருப்பதால் அது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் பத்தி 2ல் சொத்து விபரம் வேறு என்றும், தாவா சொத்து விபரம் வேறு என்றால் சரியல்ல. இரண்டும் ஒன்று தான் என்று சாட்சி கூறுகிறார்.

2) தாவா சொத்து என்பது அசல் வழக்கு எண். 60/2018ல் முருகேசன் எனக்கு எதிராகவும், இதர நபர்களுக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 60/2018 தாவா சொத்தான எத்தனை இலக்க சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் முருகேசனுக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.184/2017 என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 184/2017 வழக்கானது என்னுடைய ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றும், அசல் வழக்கு எண். 60/2018 ஆன முருகேசன் அவருடைய ஆவணத்தின் அடிப்படையிலும் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான்.

3) அசல் வழக்கு எண். 184/2017 மற்றும் இவ்வழக்கில் கண்டுள்ள சொத்துக்களானது வெவ்வேறு என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 60/2018ல் கண்ட சொத்திற்கு நான் வரி விதிப்புகளை செலுத்தி அனுபவித்து வருகிறேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் நான் வரி விதிப்புக்களை செலுத்தி அனுபவித்து வருவதாக கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 60/2018 வழக்கின் கண்ட சொத்தின் பெரும்பகுதி தற்போது வரை காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்து குறித்து இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் பட்டாப்படி தாவா சொத்தானது தனக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளார்.

4) எனது சொத்தின் சர்வே எண். என்ன என்றால் 315 ஆகும். வாதி சொத்தின்

சர்வே எண். என்ன என்றால் 321 ஆகும். எனது சொத்தின் டவுன் சர்வே எண். என்ன என்றால் 220 ஆகும். நீதிமன்ற ஆணையாளர் எனது சொத்தையும், வாதி சொத்தையும் அளந்து அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் கிழமேல் 13.6 மீட்டர், வடபக்கம் 13.8 மீட்டர் அது போக தென்வடல் கிழக்கு பக்கம் 10.6 மீட்டர், மேற்கு பக்கம் 10.4 மீட்டர் கொண்ட ஆஸ்பெட்டாஸ் சீட் போடப்பட்ட குடியிருப்பு வீடு இருந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

5) அசல் வழக்கு எண். 184/2017 ல் கண்ட சொத்தின் அளவுகள் என்ன என்றால் அகலமானது 18 என்றும், நீளமானது 38 ஆகும். 1 மீட்டருக்கு எத்தனை அடி என்றால் 3.26 அடி ஆகும். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் கண்ட அளவுகளானது எனது பத்திரத்தில் கண்ட அளவுகளை விட கூடுதலாக உள்ளது என்றால் தவறாகும். நான் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அளவுகள் குறித்து நான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றும், வழக்கிற்காக ஆட்சேபனை தெரிவித்துள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6) நான் 2011 ம் வருடம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தை 1 ம் வாதியின் தாயார் பேச்சியம்மாள் ராமசாமிபிள்ளை வகையாறவிடமிருந்து 26.10.1990 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பேச்சியம்மாள் கிரையம் பெற்ற சொத்தின் நீளம், அகலம் என்ன என்றால் 32x38 ஆகும். பேச்சியம்மாள் கிரையம் பெற்ற சொத்தானது அவரது மகன்களுக்கு தானம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு தான கொடுக்கப்பட்டதில் ஆறுமுகம், குருசாமி தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதிக்கு விற்பனை செய்துவிட்டனர் என்றால் குருசாமியிடமிருந்து கிரையம் பெற்றவர்களிடமிருந்து தான் வாதி கிரையம் பெற்றதாக சாட்சி கூறுகிறார்.

7) எனது வீட்டிற்கு தெற்கு நோக்கி வாசல்படி உள்ளது என்றால் சரிதான். சந்தின் நீளம், அகலம் எவ்வளவு என்றால் சுமார் 50 அல்லது 100 மீட்டர் இருக்கும்,

அகலமானது சுமார் 6 அடி இருக்கும். வாதிகளுக்கு அரசு வழங்கிய பட்டாவின் அடிப்படையில் வடக்கு பக்கம் 34.7 மீட்டர், தென்பக்கம் 34 மீட்டர், தென்வடல் மேற்கு பக்கம் 41.9 மீட்டர், கிழக்கு பக்கம் 44.6 மீட்டர் என்று பட்டா வழங்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பட்டாவின் அடிப்படையில் வாதியானவர் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளதால் தான் வழக்குரை 2 லக்க சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளேன் என்றால் நான் கட்டிய வீட்டைத்தான் கிரையம் பெற்றேன். தாவா 3 லக்க சொத்தைப்பொறுத்து நான் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

8) வழக்குரை 2 லக்க சொத்தானது ஆதியில் மாட்டு கொட்டகையாக பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதியின் மக்களின் மேற்படிப்புக்காக வாதியானவர் மாடு விற்பனை செய்து விட்டார் என்றும் அப்போது அந்த இடம் காலியாக இருந்ததால் அதை நான் எனக்கு சாதகமாக பயன்படுத்தி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் ABCHIJA என்ற பகுதியானது மாடுகள் மாட்டு கொட்டகைக்குள் செல்வதற்காக சொந்த இடத்தில் வாதியானவர் பாதை போட்டிருந்தார் என்றால் சரியல்ல. ஏற்கனவே மாட்டு கொட்டகைக்காக போடப்பட்டிருந்த மண் மதில் சுவரான CDGHC என்ற பகுதி சிதலமடைந்துவிட்டதால் அதை நான் எனக்கு சாதமாக பயன்படுத்தி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) கிழக்கு பக்கத்தில் 3 ம் பிரதிவாதி DEFGD என்ற பகுதியில் 3x38 அடி அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதிகள் சின்னமனூரில் தாவா சொத்தில் அல்லாமல் வேறு இடத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதி எனக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இது குறித்து போலீசார் விசாரணை செய்தனர் என்றும் அப்போது நான் சர்வேயர் மூலம் அளந்து கொள்ளலாம் என்று கூறினேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வாதி 2 முறை தாவா சொத்தை அளப்பதற்கு நடவடிக்கை எடுத்தாரா என்றால் எடுத்தார். அவ்வாறு அளந்தபோது நான் ஆக்கிரமிப்பு செய்த விபரம்

தெரியவந்தது என்றும், அதனால் தான் நான் அசல் வழக்கு எண். 184/2017 யை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

10) நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள விபரம் குறித்து தெரியவந்ததால் தான் அசல் வழக்கு எண். 184/2017 யை நான் மேல் நடத்தவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியமானது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

PRAVEENA
Digitally signed by PRAVEENA
Date: 2026.07.13 18:17:05 +0300

District Munsif ,
Uthamapalayam.